# ஜம்இய்யதுல் மஷாரீஇல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ்

## தூய பாதையும் அதன் சேவையும்

جمعية المشاريع الخيرية الإسلامية

ASSOCIATION OF ISLAMIC CHARITABLE PROJECTS

COLOMBO, SRI LANKA.

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

الحمد لله رب العاملين وصلى الله وسلم على النبي وعلى آله وصحبه أما بعد

فقال الله تعالى :﴿يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا إِن جَاءَكُمْ فَاسِقٌ بِنَبَإٍ فَتَبَيَّنُوا أَن تُصِيبُوا قَوْمًا بِجَهَالَةٍ فَتُصْبِحُوا عَلَىٰ مَا فَعَلْتُمْ نَادِمِينَ﴾

وقال رسول الله ﷺ :خير القرون قرني ثم الذين يلونهم ثم الذين يلونهم ثم يفشو الكذب ألا لا يخلون رجل بامرأة إلا كان ثالثهما الشيطان فمن أراد بحبوحة الجنة فليلزم الجماعة.

புகழ்கள் யாவும் படைப்புகள் அனைத்தையும் இல்லாமையிலிருந்து படைத்து, அவைகளுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாத அல்லாஹ்வுக்கே!. மேலும் அதிக சிறப்புகளையும், தன் உம்மத்தின் மீது முஹம்மத் ﷺ அவர்கள் எதையெல்லாம் பயப்படுவார்களோ அது அனைத்தை விட்டும் அச்சமின்மையையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

மேற்குறித்த ஹதீஸின் தெளிவுரையின் படி, ஹிஜ்ரத் நடைபெற்றதிலிருந்து ஆரம்பித்து முதல் 100 ஆண்டுகளில் வாழ்ந்தோரே பின் வரும் இந்த உம்மத் அனைவரையும் விட மிக சிறப்புக்குரியவர்களாகும். அதனைத் தொடர்ந்து, அந்த 100 ஆண்டுகளை அடுத்து வந்த 100 ஆண்டுகளாகும். அதாவது தாபியீன்களது நூற்றாண்டாகும். அதனைத் தொடர்ந்து அதனை அடுத்து வந்த 100 ஆண்டுகளாகும். அது தபஉத் தாபியீன்களது காலமாகும். இந்த மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களே இந்த உம்மத்தின் மேன்மைக்குரியவர்களாகும்.

இதில் முதல் நூற்றாண்டென்பது, ஸஹாபாக்கள் வாழ்ந்த நூற்றாண்டாகும். இவர்கள் வாழ்ந்த இந்தக் காலப்பகுதியிலே அனைத்து ஸஹாபாக்களும் கொள்கை கோட்பாடுகளில் அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத்

ﷺ அவர்களிடமிருந்து எதைக் கற்றுக் கொண்டார்களோ அதே கோட்பாடுகளிலேயே நிலைத்திருந்தனர். அவர்களிடையே ஈமான் ரீதியான எந்தக் குழப்பமும், கருத்து வேற்றுமையும் காணப்படவில்லை.

பின்பு அலீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே கொள்கைக் கோட்பாடுகள் ரீதியான மோசமான சிந்தனை கொண்டோராகிய ஷீயாக்கள், கவாரிஜ்கள் தோன்றினர்.

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டின் காலப்பகுதியானது, அல்-குர்ஆன், அல்-ஹதீஸுக்கு முரண்படும் சிந்தனைகளைக் கொண்ட பல பிரிவுகள் தோன்றிய காலப்பகுதியாகும். இந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இரு பெரும் இமாம்களை அழ்ழாஹ் ஏற்படுத்தி, சத்தியக் கொள்கையை பாதுகாக்கச் செய்தான். அவ்விருவரில் ஒருவர் இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களாகும். ஹிஜ்ரி 260 இல் பிறந்த இவர்கள் அறபி ஒருவராகும். இவர்கள் சிறப்புமிகு ஸஹாபியான அபூ மூஸா அல்-அஷ்அரி றழியழ்ழாஹு அன்ஹுஅவர்களின் வரிசைமிகு வம்சாவழியைச் சேர்ந்தவர்களுமாகும்.

மற்றொருவர் இமாம் அபூ மன்ஸூர் அல் மாதுரீதி றஹிமஹுழ்ழாஹ் அவர்களாகும். இவர்கள் பாரசீக பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட அஜமி ஒருவராகும்.

இந்த இரு பெரும் இமாம்களே அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅஹ்வின் அனைத்து கொள்கைக் கோட்பாடுகளையும் அல்-குர்ஆன், அல்-

ஹதீஸின் ஆதார அடிப்படையிலும், பகுத்தறிவு ரீதியான ஆதார அடிப்படையிலும் உறுதிப்படுத்தி, அக்கொள்கையை மிகத் தெளிவாக முன்வைத்தவர்களாகும். அத்தோடு அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினருக்கு மாறுபட்ட கொள்கை கொண்ட முஃதஸிலா[1] மற்றும் முஷப்பிஹா[2] போன்ற இன்னும் பல குழப்பவாதிகளுக்கு மறுப்புகளையும் வழங்கி இஸ்லாமிய தூய கொள்கைக் கோட்பாடுகளை பாதுகாக்க அடித்தளமிட்டவர்களுமாகும்.

இந்த இரு இமாம்களைத் தொடர்ந்து வந்த அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினர் அனைவரும் இவ்விருவரையும் சார்ந்தோராகவே இருந்தனர். அதாவது இவ்விருவரும், இஸ்லாமிய கொள்கைக் கோட்பாடுகளை தெளிவுபடுத்திய அமைப்பிலேயே பின்வந்த அனைத்து முஸ்லிம்களும் நம்பிக்கை கொண்டனர். அதனால் தான் அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினருக்கு அஷ்அரிய்யாக்கள், மாதுரீதிய்யாக்கள் என சொல்லப்படுகிறது.

---

[1] முஃதஸிலா எனப்படுவோர் இஸ்லாத்துக்கு முரணான சிந்தனை கொண்ட பிரிவாகும். இவர்களில் பல பிரிவுகள் உள்ளன. அவர்களில் சிலர் ‘‘மனிதனது செயற்பாடுகள் அல்லாஹ்வினால் படைக்கப்படுவதில்லை. அவைகளை மனிதனே படைக்கின்றான்’’ என்ற குப்ரிய்யத்தான சிந்தனை கொண்டோராகவும், இன்னும் சிலர் ‘‘நலவுகள் மாத்திரமே அல்லாஹ்வின் ஏற்பாட்டின் (கழாகதர்) படி நிகழ்கின்றன. ஆனால் கெடுதிகள் நடைபெறுவதை அல்லாஹ் நாடவில்லை’’ என்ற குப்ரிய்யத்தான சிந்தனையை கொண்டோராகவும் இது தவிர்ந்த இன்னும் பல குப்ரிய்யத்தான, வழிகேடான சிந்தனைகள் கொண்டோராகும்.

[2] முஷப்பிஹா எனப்படுவோர் படைப்பாளனாகிய அல்லாஹ்வை படைப்பினம் போல் சித்தரிக்கும் குப்ரிய்யத்தான கொள்கை கொண்டோராகும். அதாவது ‘‘அல்லாஹ் வானத்தில் யதார்த்தத்தில் இருக்கின்றான், அவன் அர்ஷிலே உட்கார்ந்திருக்கின்றான், அவன் தஹஜ்ஜுத் வேளையில் அடிவானத்துக்கு யதார்த்தத்திலே இறங்கி வருகின்றான். அவனுக்கு கை, கால், முகம் போன்ற உடலுறுப்புகள் இருக்கின்றன’’ போன்ற குப்ரிய்யத்தான கொள்கை கொண்டோர்களே இந்த முஷப்பிஹாக்களாகும்.

அல்-இமாம் முஹம்மத் முர்தழா அஸ்ஸபீதி அல்ஹுஸைனீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் “இந்த உம்மத்தின் பெரும்பான்மையினர், அஷ்அரிய்யாக்களும், மாதுரிதிய்யாக்களுமே” எனக் கூறியுள்ளார்கள். நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின், அவர்களது ஸஹாபாக்களின் மற்றும் அவர்களை முறையாக பின்பற்றியோரின் கொள்கைக் கோட்பாடுகளே அஷ்அரிய்யாக்கள் மற்றும் மாதுரீதிய்யாக்களின் கொள்கைக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டின் பிரகாரமே கிழக்கிலும், மேற்கிலும் உலகெங்கும் வாழும் பல கோடி முஸ்லிம்களும் கற்றும் கற்பித்தும் வாழ்ந்திருக்கிறார்கள். அல் ஹம்து லில்லாஹ் நாங்களும் இந்தக் கொள்கைக் கோட்பாட்டின் பிரகாரமே இருக்கிறோம்.

பருவத்தையடைந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மார்க்க அறிவில் கட்டாயம் கற்றிருக்க வேண்டிய பகுதியென்று ஒரு பகுதி உண்டு. அதைக் கற்றே ஆக வேண்டும். கட்டாயம் கற்றே ஆக வேண்டிய அக்கல்வியானது, இஸ்லாமியக் கொள்கைக் கோட்பாடுகள் தொடர்பானது என்றும், இஸ்லாமிய சட்ட ஒழுங்கு தொடர்பானது என்றும் வகுக்கப்படுகின்றது.

இரு ஷஹாதஹ் கலிமாக்களின் விளக்கத்தை அறிதல், அழ்ழாஹ்வின் தன்மைகளை அறிதல், அழ்ழாஹ்வுக்கு பொருத்தமற்ற தன்மைகளை விட்டும் அவனைப் பரிசுத்தப்படுத்தல், அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறிச்சென்ற, முன்னர் வாழ்ந்த சமுதாயத்தின் நிகழ்வுகள், மரணத்தின் பின்பு மற்றும் கியாமத் நாளில் ஏற்படவிருக்கும் நிகழ்வுகள்

அனைத்திலும் அவர்களை உண்மைப்படுத்தல், அவர்கள் ஹலாலாக்கியதை ஹலாலாக ஏற்றல், அவர்கள் ஹறாமாக்கியதை ஹறாமெனஏற்றல், இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடும் குப்ரிய்யத்தான கொள்கை கோட்பாடுகள், செயல்கள், வார்த்தைகளை விட்டும் தவிர்ந்து கொள்வதற்காக அவைகளைப் பற்றி அறிதல் போன்றன இஸ்லாமிய கொள்கைக் கோட்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கட்டாயம் அறிந்தே ஆக வேண்டிய விடயங்களாகும்.

தொழுகைக்காக சுத்தமாகும் முறையை அறிதல், தொழுகை நிறைவேறுவதற்கான நிபந்தனைகளை அறிதல், தொழுகையின் ருகுன்களை அறிதல், தொழுகையை முறிக்கும் விடயங்களை அறிதல் போன்ற இன்னும் பல சட்ட ஒழுங்குகள், இஸ்லாமிய சட்டம் தொடர்பாக ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய விடயங்களாகும்.

மேற்கூறப்பட்ட இஸ்லாமியக் கொள்கைக் கோட்பாடுகள் ரீதியான விடயமாகலாம், இஸ்லாமிய சட்டம் தொடர்பான விடயமாகலாம் வெறுமனே நூல்களை வாசித்து கற்கலாகாது. ஏனெனில், நூற்களில் சிலவேளை உற்சொருகல்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. வாசிப்பவர், நூற்களில் எழுதப்பட்டுள்ளதை முறைகேடாக விளங்கவும் வாய்ப்புள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிழையான முறைகளில் வணக்கவழிபாடுகளை செய்ய அவரை அது வழிகோலுவதுடன், அழ்ழாஹ்வை படைப்புகளுடன் உவமை செய்யும் படுமோசமான கொள்கையின் பக்கமும் அவரை அழைத்துச் சென்றுவிடும். மேற்குறித்த

முறைகளில் இஸ்லாமிய கல்வியறிவை கற்பது, நமது முன்னோர்களான அஸ்-ஸலபுஸ்ஸாலிஹீன்கள் மற்றும் ஹலபுகள் காட்டித்தந்த சரியான பாதையல்ல.

முஹத்திஸீன்களில் ஒருவரான இமாம் ஹதீப் அல்-பக்தாதீ றஹிமஹுஹ்ழ்ழாஹ் அவர்கள் "இஸ்லாமிய கல்வியறிவு இஸ்லாமிய, நம்பகமிக்க அறிஞர்களிடமிருந்து நேரடியாகவே கற்கப்பட வேண்டும்" எனக் கூறியுள்ளார்கள். மேலும் அஸ்-ஸலபுஸ்ஸாலிஹீன்களில் ஒருவரான இமாம் இப்னு ஸீரீன் றஹிமஹுஹ்ழ்ழாஹ் அவர்கள் "இஸ்லாமிய கல்வியறிவுதான் இஸ்லாம் மார்க்கமே. எனவே உமது மார்க்கத்தை எவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறீர் என்பதை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்" என கூறியிருக்கிறார்கள். எனவே, இஸ்லாம் தொடர்பான கல்வியறிவு, நேர்மையானவரிடம் கற்ற ஒரு நேர்மையான அறிஞரிடமிருந்தே கற்கப்பட வேண்டும்.

இஸ்லாத்தின் பெயரில் பொய்களும், வழிகேடுகளும் நிறைந்து காணப்படும் இன்றைய சூழ்நிலையில், இஸ்லாமிய கல்வியறிவை முறையாகக் கற்று அதை அயராது கற்றுக் கொடுத்து, இஸ்லாத்தின் தூய்மையை மாசுபட விடாது பாதுகாத்த இஸ்லாமிய பேரறிஞர் ஒருவரே அல்-அல்லாமஹ் அப்துழ்ழாஹ் அல்-ஹரரீ றஹிமஹுஹ்ழ்ழாஹ் அவர்களாகும். இவர்கள் ஹபஷாவை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஹிஜ்ரி 1328 (கி.பி. 1910) ஆம் ஆண்டு பிறந்த இவர்கள், இஸ்லாமிய தூய கல்வியை முறையாகக் கற்ற, நேர்மையான அறிஞர்களைத் தேடி அதனை கற்றார்கள்.

அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினராகிய அஷ்அரிய்யஹ்கள் மற்றும் மாதுரீதிய்யஹ்களின் கொள்கையை மிகத் தெளிவாக கற்று, அதை மக்களிடையே போதிக்க அவர்கள் தன்னை அர்ப்பணித்தார்கள். இஸ்லாத்தின் பெயரால் ஊடுருவியிருந்த பிழையான கொள்கையுடையோருக்கு தக்க மறுப்புகளை வழங்கி, இஸ்லாமிய தூய கொள்கைக் கோட்பாட்டை மேலும் ஆதாரங்களினால் வலுப்படுத்தினார்கள்.

இஸ்லாமிய கொள்கைக் கோட்பாட்டில் அஷ்அரிய்யாகவும், இஸ்லாமிய சட்ட ஒழுங்கு விவகாரங்களில் ஷாபிஇய்யாகவும் திகழ்ந்த இந்த இமாமவர்கள், தக்வா, பற்றற்ற வாழ்வு, பணிவு, சகிப்பு, உச்சகட்ட பேணுதல், விசாலமான அறிவு போன்ற அதிசிறந்த பண்புகளைக் கொண்ட இஸ்லாமிய வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்கள். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்களிடம் இஸ்லாமிய கல்வியறிவைப் பயில அலைமோதினர்.

இவர்கள், வெறுமனே இஸ்லாமிய கல்வியை கற்பித்தலுடன் மாத்திரம் நின்றுவிடாமல் இஸ்லாமிய கொள்கைத் தத்துவங்களை உள்ளத்தில் பதித்து, அதன் சட்ட திட்டங்களை விட்டும் சற்றும் பிசகாது அவைகளை நடைமுறைப்படுத்தி, இஸ்லாமிய ஞான உபதேசங்களினால் உள்ளத்தை பக்குவபடுத்தி, உயர்வு தரும் நற்குணங்களை கடைபிடித்தொழுகும் ஸூபி மகானாகவும் காணப்பட்டதோடு, தர்பியத், தவ்ஜீஹ், நஸீஹத் போன்ற நெறியாள்கை, வழிநடாத்தல்களைக் கொண்டு தம் மாணவர்களை பக்குவப்படுத்தும்

ஷெய்ஹாகவும் பெரும்பணி செய்தார்கள். மேலும் இவர்கள், ரிபாயிய்யஹ் மற்றும் காதிரிய்யஹ் தரீக்காஹ்களின் பெரும் ஷெய்ஹாகவும் இருந்து மக்களுக்கு இஸ்லாமியக் கொள்கை மற்றும் சட்ட ரீதியான மெய்விளக்கங்களை வழங்கி மக்களின் நேரிய வாழ்வுக்கு பெரும்பங்காற்றியிருக்கிறார்கள்.

ஹிஜ்ரி 14 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் இஸ்லாமிய சேவையாற்றிய இவர்கள், பண்படுத்தப்பட்ட நேர்த்திமிகு பல்லாயிரக்கணக்கான மாணவர்களையும், பெறுமதிமிக்க பல நூறு கிரந்தங்களையும் எமக்களித்துள்ளார்கள்.

தற்போது கொழும்பில் நிறுவப்பட்டுள்ள ஜம்இய்யதுல் மஷாரீஉல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ் பேரவையானது, இந்த இமாமவர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் இஸ்லாமிய தூய கல்வியை போதிப்பதிலும் மற்றும் இஸ்லாமிய சமூக சேவைகளை வழங்குவதிலும் தடம்பதித்து வருகிறது.

மேலும் எமது ஜம்இய்யஹ், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், சுகாதார ஆலோசனைகள், மருத்துவ முகாம்கள், சூழல் பாதுகாப்பு, குடும்பவியல் விவகார வழிகாட்டல்கள் போன்ற இன்னும் பல பொதுப்பணிகளையும் செய்து வருகிறது.

நம் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களை கடைபிடித்து ஒழுகும் நல்ல தலைமுறைக்குத் தேவையான நம் கலாச்சார மற்றும் பண்பாட்டு நடைமுறைகளை போதிப்பதுடன், இன்று முஸ்லிம் வாலிபர்களுக்கிடையில் பெருகிவரும் போதைப்பொருள் பாவனை, விபச்சாரம், இன்னோரன்ன இஸ்லாமிய ஷரீஆ

சட்ட விரோத செயல்களை விட்டும் அவர்களை தூரமாக்கும் அறிவுரைகளை சொற்பொழிவுகள், செயலமர்வுகள் மூலம் வழங்கியும் வருகிறது. மேலும், எமது பிரதேசத்திலோ, அதனை அண்டிய பகுதிகளிலோ இயற்கை சீற்றங்கள், அநர்த்தங்கள் ஏற்படும் வேளை அவர்களின் பொது நலனுக்காக சதுர மற்றும் பொருள் உதவிகளை வழங்கவும் எமது ஜம்இய்யஹ் பல திட்டங்களை வகுத்துள்ளது.

சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சை போன்ற அரச பரீட்சைகளுக்கான சிறப்பு அமர்வுகளை மாணவர்களுக்கு ஒழுங்கு செய்து அவர்களை சித்தியடையச் செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல். தேவை ஏற்படும் போது எமது பிரதேசத்திலோ, அதனை அண்டிய பகுதிகளிலோ அல்லது வேறு இடங்களிலோ சிரமதானம் மற்றும் பொதுப்பணிகளில் ஈடுபடுவதுடன், பிரதேசமக்களின் நலனை கருத்திற்கொண்டு ஆரோக்கியம், சுற்றுச் சூழல் சுகாதாரம் போன்றவற்றில் கவனம் செலுத்துவதற்கான விழிப்புணர்வுகளை வழங்கள், மேலும் சிறுவர்கள், பெண்கள் ஆகியோருக்கான விஷேட தஜ்வீத் மற்றும் பிக்ஹ் வகுப்புகள் நடாத்தல், வயது முதிர்ந்தவர்களுக்கான மார்க்க வழிகாட்டல்கள், ஏழை எளியோருக்கான முடியுமான வசதிகளை வழங்கள், பள்ளிவாசல்களில், மத்ரஸாக்களில் பணிபுரியும் பேஷ் இமாம்கள், ஹஸ்ரத்மார்களின் வாழ்க்கைச் சுமையை இலகுபடுத்தும் விதமாக அவர்களுக்கு எம் அமைப்பினால் முடியுமான பொருளாதார உதவிகளை நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளல் போன்றவற்றிலும் நம் ஜம்இய்யஹ் கவனமெடுத்துள்ளது.

வன்முறை, தீவிரவாத சிந்தனைகளை தடுத்து, இஸ்லாமிய சமத்துவ, சகோதரத்துவ சிந்தனைகளை, அறிவுரைகளை முஸ்லிம்களுக்கிடையில் குறிப்பாக

வாலிபர்களுக்கிடையில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளல் போன்ற இன்னும் பல சேவைகளையும் வழங்கவும் தயாராகி வருகிறது.

இதன் முக்கிய அங்கமாக தரமான, ஒழுக்கமிக்க, தற்காலத்துக்குத் தேவையான ஆலிம்களை உருவாக்கும் மிக முக்கிய பணியில் எமது ஜம்இய்யஹ், கொழும்பில் ஜாமிஅதுல் இமாம் அல் அஷ்அரீ என்ற இஸ்லாமிய கலாபீடத்தை அமைத்து, சிறப்பாக நடாத்தி வருகிறது. ஆறாண்டு கால கற்கை நெறியையும், மௌலவிமார்களுக்கான விஷேட ஒரு வருட கற்கை நெறியையும் கொண்டு இக்கலாபீடம் செயலாற்றி வருகிறது.

இன் ஷா அழ்ழாஹ் இஸ்லாமிய தூய கல்வி பாதுகாக்கப்படவும், எம் சமூகத்தின் ஈருலக வெற்றிக்காகவும் தொடர்ந்தும் ஜம்இய்யஹ் பல திட்டங்களை அமுல்படுத்தவும் தயாராகி வருகிறது.

குப்ருகளும், ஷிர்க்குகளும், பித்அத்களும் தலைதூக்கியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் நாமும், நம் உறவுகளும் சத்தியக் கொள்கையை விட்டும் தடம் புரளாது, இஸ்லாமியக் சத்தியக் கொள்கையை வலுவாக பற்றிப்பிடித்து, இஸ்லாமிய அஹ்லாக்குடன் இனிதாக வாழ்ந்து ஈருலக வெற்றியை அடைய இந்த ஜம்இய்யதுல் மஷாரீஇல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ் என்ற சமூக நலத்திட்டமிடல் பேரவை நிச்சயம் துணை செய்யும். இதில் எதுவித சந்தேகமுமில்லை. அழ்ழாஹ்வே போதுமானவன்.

**அல்–அல்லாமஹ் அப்துல்லாஹ் அல்–ஹரரீ றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தனது மன்ஹஜ் பற்றி தெளிவுபடுத்துகையில்...**

“நாங்கள் முஸ்லிம்களைச் சேர்ந்தவர்களே. நாம் புதுமையான ஒரு பாதையையோ அல்லது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட சையியித் குதுப் மற்றும் தகிய்யுத்தீன் அந்-நபஹானீ ஆகியோரின் சிந்தனைகளையோ அல்லது சுமார் 260 வருடங்களுக்கு முன் முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாபினால் தோற்றுவிக்கப்பட்ட சிந்தனைகளையோ அல்லது 750 வருடங்களுக்கு முன்னதாக இப்னு தைமிய்யாவினால் உருவாக்கப்பட்ட நவீன கொள்கைகளையோ பின்பற்றுபவர்களல்ல. முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் தனது சிந்தனைகளில் பலதை இப்னு தைமிய்யாவின் வழிகேடான சிந்தனைகளிலிருந்து எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது பாதையானது, உலகின் பல நூறு இலட்ச முஸ்லிம்கள் பின்பற்றி வரும் பாதையாகும். நம்பிக்கைக் கோட்பாடுகளில் அல் இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் கோட்பாடுகளின் பிரகாரமும், வணக்க வழிபாடுகள், இபாதாத் மற்றும் அமல் ரீதியான விடயங்களில் அல்-இமாம் முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ்-ஷாபிஈ றஹிமஹுல்லாஹ் அவர்களின் மத்ஹப் பிரகாரமும் பல கோடி முஸ்லிம்கள் செல்லும் பாதையே நம் பாதையாகும். இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றஹிமஹுல்லாஹ் அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் தான் அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅஹ்வின் பெரும் இமாமாகும். அவர்கள் ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்களின் நம்பிக்கைக்

கோட்பாட்டை ஒன்று திரட்டி ஆதாரங்கள் அடிப்படையில் தொகுத்தளித்தவராகும். ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்கள் ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் மரணித்த அஸ்-ஸலபுஸ்ஸாலிஹீன்களில் ஒருவருமாகும். ஷாபிஈ மத்ஹபனாது சுமார் 1250 வருடங்களுக்கு மேலாக உலக முஸ்லிம்கள் கடைபிடித்து வரும் மிகப் பிரபல்யமடைந்த மத்ஹபாகும்.

அரச யாப்புகளை முன்வைத்து தீர்ப்புச் செய்யும் முஸ்லிம் நீதிபதிகளை, அதிகாரிகளை படுகொலை செய்வதை ஆகுமான செயலென்பதாக நாம் கூறுவோருமல்ல. அத்தகு மாபாதக செயலை செய்து வரும் கும்பலுக்கும் நமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர்களை விட்டும் முற்றிலும் நாம் தூரமானவர்களே.

ஒரு முஸ்லிமை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி குப்ரில் வீழ்த்திவிடும் குப்ரிய்யத்தான வார்த்தைப் பிரயோகங்கள், குப்ரிய்யத்தான நம்பிக்கைகள் போன்றவைகளை தெளிவுபடுத்தி, முஸ்லிம்களை அவைகளை விட்டும் தூரப்படுத்துவதில் நாம் ஒன்றும் புதிய பாதையொன்றை வகுக்கவில்லை. ஏற்கனவே நாற்பெரும் மத்ஹபுகளைச் சார்ந்த அறிஞர்கள் அவரவர் நூற்களிலே செய்ததையே நாமும் செய்து வருகிறோம். இது தொடர்பாக அல்-இமாம் முர்தழா அஸ்-ஸபீதி றஹிமஹுமுல்லாஹ் அவர்கள் ‘இஹ்யாஉ உலூமித்தீன்’ என்ற கிரந்தத்தின் விரிவுரையில் பின்வருமாறு கூறியிருப்பது அதற்கான ஒரு சான்றாகும். “நான்கு மத்ஹபுகளைச் சேர்ந்த பல

இமாம்கள், குப்ரை ஏற்படுத்தும் சிந்தனைகள், வார்த்தைப் பிரயோகங்கள் பலதை எச்சரிக்கும் விதமாக தெளிவுசெய்து பல நூல்களை தொகுத்திருக்கின்றனர்" எனக் கூறியுள்ளார்கள்.

நாம் எந்தவொரு அரசின் பண உதவி பெற்று அவர்களுக்கு இசைவாக கருமமாற்றிவருவோருமல்ல. எந்தவொரு அரசின் பண உதவியை பெறுவோருமல்ல. அல்லாஹ்வே இதனை நன்கறிந்தவன்.

மேற்குறித்த நமது பாதையை விடுத்து, நம்மை வழிகேடான வேறு சிந்தனைகளைக் கொண்டவர்கள் என வாதிடுவோர், விசாரணை தினத்தின் அதிபயங்கரமான விசாரணையை மறந்து விடவேண்டாம்."

ولله الحمد والصلاة والسلام عليك يارسول الله

மேலதிக தகவல்களுக்கு

www.projectsassociation.org

மேலதிக தொடர்புகளுக்கு


Head Office

AICP

Jamiyyathul Masha^reeul Khairiyyah Al Islamiyyah

No 10A, Fredrica rd, Wellawatta, Colombo - 06.

011 7 446 336 / 077 232 8686 / 077 077 9406

Our Branch

No 03, Hamid Lebbe Aalim Place, Kathankudy - 04.

077 787 0 787

## நாம் அறிந்திருக்க வேண்டிய ஈமானின் சில பிரதான பகுதிகள்

இவ்வுலகைப் படைத்து பரிபாலிக்கும் றப்பு உள்ளான். அவன் தான் அல்லாஹ். அல்லாஹ்தான் அனைத்தையும் இல்லாமையில் இருந்து படைத்தவன். சூரியன், சந்திரன், இருள், ஒளி, வானம், பூமி, மனிதன், மலக்கு, ஜின், நீர், காற்று போன்ற இன்னும் பல கோடான கோடி படைப்புகளை அல்லாஹ்தான் படைத்தான். அவனால் படைக்கப்பட்ட எதற்கும் எந்த விதத்திலும் அல்லாஹ் ஒப்பாக மாட்டான் என்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாகும்.

மேலும் அல்லாஹ் இடம் எடுத்துக்கொள்ளும் தன்மை கொண்டவனல்ல. அதாவது அல்லாஹ்வால் படைக்கப்பட்ட சடப்பொருட்கள் தாம் அமைவு பெறுவதற்கு ஒரு இடத்தை எடுத்துக்கொள்வது போல அல்லாஹ் இடம் எடுத்துக்கொள்பவன் அல்ல. ஏனெனில் அவன் சடப்பொருளல்ல. ஆகையால் அல்லாஹ் யதார்த்தத்தில்
**வானத்தில் இருக்கிறான் என்றோ**
**அர்ஷில் இருக்கிறான் என்றோ**
**சுவர்க்கத்தில் இருக்கிறான் என்றோ**
**கஃபாவில் இருக்கிறான் என்றோ**
**எல்லா இடங்களிலும் அவன் யதார்த்தத்தில் இருக்கிறான் என்றோ நம்பிக்கை கொள்ளப்பட மாட்டாது.**
இவ்வாறான நம்பிக்கைகள், அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவுக்கு முற்றிலும் எதிரானதும், நரகத்தில் சேர்த்துவிடக்கூடியதுமாகும். மேலும் அவன் தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான் என்று கூறுவதும்

இஸ்லாமிய அடிப்படை கொள்கைக்கு முற்றிலும் முரணான ஒரு கோட்பாடாகும்.

இடங்களை படைத்தவனாகிய அல்லாஹ் இடங்களின் பக்கம் ஒருபோதும் தேவைகாணமாட்டான். யாராவது அழ்ழாஹ் ஓர் இடத்தில் இருக்கிறான் அல்லது உட்கார்ந்திருக்கிறான் அல்லது குடியிருக்கிறான் என நம்பியிருந்தால் அவர் அழ்ழாஹ்வுக்கு இல்லாத ஒரு பண்பை இருப்பதாக நம்பியவனாகி ஈமானை இழந்து விடுகிறார். நஊதுபில்லாஹி மின்ஹு.

அசைதல், அசையாதிருத்தல், ஒரு இடத்தில் தரிபடுதல், பல இடங்களில் தரிபடுதல், செல்லுதல், வருதல், படைப்பினம் ஒன்றுடன் சேர்ந்திருத்தல்,படைப்பினம் ஒன்றை விட்டும் பிரிந்திருத்தல், யதார்த்தத்தில் சமீபமாக இருத்தல், தூரமாக இருத்தல், அளவு, பெறுமானம் கொண்டிருத்தல், உடல் கொண்டவனாக இருத்தல், நிறை, பாரம் கொண்டவனாக இருத்தல், நிறம் பெற்றிருத்தல், உருவம் பெற்றிருத்தல், வடிவம் பெற்றிருத்தல்,உடலுறுப்புகள் கொண்டிருத்தல்,கோணம் பெற்றிருத்தல்,ஏறுதல், இறங்குதல், ஓர் திசையில் இருத்தல், பல திசைகளில் இருத்தல் இவ்வனைத்தும் அழ்ழாஹ்வுக்கு இருக்கக்கூடாத தன்மைகளாகும். ஏனெனில் மேற்கூறப்பட்ட தன்மைகள் அனைத்தும் படைப்பினங்களின் தன்மைகளாகும். எதுவெல்லாம் ஓர் அளவு கொண்டதாக இருக்குமோ அது படைக்கப்பட்டதாகத்தான் இருக்குமே தவிர படைப்பாளனாக இருக்க முடியாது. பரிசுத்தமான அழ்ழாஹ்வே அனைத்தையும் படைத்தான்.

படைக்கப்பட்டவைகளிடம் காணப்படும் எந்தத் தன்மையும் படைத்தவனாம் அழ்ழாஹ்விடம் இருப்பதாக நம்பிக்கை கொள்ளப்படமாட்டாது.

இடம், திசை, அர்ஷ், குர்ஸீ, சுவனம், வானம், பூமி, ஒளி, இருள், உடலுறுப்புகள், உருவம், வடிவம் போன்ற அனைத்தையும் அழ்ழாஹ் படைக்க முன் மேற்குறித்த எதுவுமின்றி அவன் இருந்தது போலவே அனைத்தையும் படைத்ததன் பின்பும் இடம், திசை, அர்ஷ், வானம், உருவம், உடலுறுப்பு போன்ற எதுவுமின்றியே அழ்ழாஹ் உள்ளான் என்பதே எமது கோட்பாடாகும்.

وبالله التوفيق